112878

கிருஷ்ணராயபுரம்
திருக்கண்டமாலீஸ்வரர் கோயில்
வரலாறு

Q23;38.21192
N58
112878

147

உ 147/358

கிருஷ்ணராயபுரம்

# ஸ்ரீ திருக்கண்மாலீஸ்வரர் கோயில்

# வரலாறு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JUL 1958
MADRAS

கும்பாபிஷேக வெளியீடு.

1958.

[...பெற்றது.] ★ [விலை. 0—4—0

O23:38·உபுரஉ·lc.
N58
112878

112878



# முன்னுரை.

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. ஆலயந் தொழுவது சாலவும் நன்று'' என்பர் ஆன்றோர். சோழ நாட்டில் காணும் இடங்களிலெல்லாம் கண்ணைக் கவரும்படியான பல கோயில்கள் உள்ளன அவைகளுள் திருச்சிராப்பள்ளி ஜில்லா—குளித்தலை தாலூகாவில், திருச்சி — ஈரோடு புகை வண்டிப் பாதையில் சித்தலவாய் (சிற்றலைவாய்) ரயில் நிலையத்துக்குக் கீழ்புறத்தில் ஸ்ரீ திருக்கண்மாலீஸ்வரர் கோயில் உள்ளது. பழமையான கோயில் புதுப்பிக்கப்பெற்றது.

கோயிலுக்த வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்துகொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) அனுமதிப்படி, தேவஸ்தானத்தார் கொடுத்த குறிப்புகளைக்கொண்டு இவ்வரலாறு சுருக்கமாய் எழுதப்பெற்று அறநிலையப் பாதுகாப்பு இலாகா தலைவர் அவர்களால் பார்வையிடப்பெற்றது. பழங்கால சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், தல வரலாறுகளை வெளிவரச் செய்வதிலும், சமய உண்மைகளைப் பரப்புவதிலும் தற்போதுள்ள அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் திரு **A. உத்தண்டராம பிள்ளை B. A., B. L.** அவர்களும், மற்றையோர்களும் ஆவன செய்து வருகின்றார்கள். ஆணையர் அவர்களே இக்கோயிலின் புதிய திருப்பணியைத் தொடங்கிவைத்தார்கள். இதில் கோயில் விளக்கமும், தலப் பெருமைகளும், கல்வெட்டுச் செய்திகளும் துதிப் பாடல்களும் சேர்க்கப்பெற்றுள்ளன. 27—6—58ல் நிகழும் கும்பாபிஷேகத்தின் அங்கமாக இவ்வரலாறு வெளியிடப்படுகிறது. அன்பர்கள் படித்து ஸ்ரீ திருக்கண்மாலீஸ்வரரின் திருவருளைப் பெறுவார்களாக.

திருச்சிராப்பள்ளி,
1—6—58.

**R. பஞ்சநதம் பிள்ளை,**
தமிழ்ப் புலவர்.

## உள்ளடக்கம். பக்கம்

| | | |
|---|---|---|
| 1 | கோயில்களும், குறிகளும் | ... 1 |
| 2 | கோயிலும், இருப்பிடமும் | ... 3 |
| 3 | கோயிலின் அமைப்பு | ... 5 |
| 4 | கோயிலின் படம் | ... 7 |
| 5 | பிற கோயில்கள் | ... 8 |
| 6 | மூர்த்திகளின் பெயர்கள் | ... 8 |
| 7 | தீர்த்தங்கள் | ... 8 |
| 8 | தலப் பெருமைகள் | ... 9 |
| 9 | திருப்பணிகள் | ... 10 |
| 10 | சிற்பங்கள் | ... 12 |
| 11 | கல்வெட்டுகள் | ... 12 |
| 12 | தினப் பூஜையும், திருவிழாக்களும் | ... 13 |
| 13 | வருமானமும், சொத்துக்களும் | ... 15 |
| 14 | நிர்வாகம் | ... 16 |
| 15 | கோயில் தரிசன முறை | ... 16 |
| 16 | துதிப் பாடல்கள் | ... 17 |

## கோயில் விளக்கம்.

**கோயில்:—** ஸ்ரீ திருக்கண்மாலீஸ்வரர் கோயில்
**இடம்:—** கிருஷ்ணராயபுரம்—சிற்றலைவாய்
**விநாயகர்:—** வலஞ்சுழி விநாயகர்
**மூலவர்:—** ஸ்ரீ திருக்கண்மாலீஸ்வரர்
**அம்மன்:—** வண்டார்குழலியம்மை — ஸ்ரீ மதுகரவேணி
**தீர்த்தம்:—** சிற்றலை வாய்க்கால்—காவிரி
**மரம்:—** வில்வமரம்

திருச்சிராப்பள்ளி ஜில்லா — குளித்தலை தாலூகாவில் திருச்சி—ஈரோடு புகைவண்டிப் பாதையில் சித்தலவாய் ரயில் நிலையத்திற்குக் கிழக்கில் இக்கோயில் உள்ளது.



# கிருஷ்ணராயபுரம்
# ஸ்ரீ திருக்கண் மாலீஸ்வரர் கோயில்
# வ ர லா று.

"விண்ணகத்தான் மிக்கவேதத்துளான் விரிநீருடுத்த
மண்ணகத்தான் திருமாலகத்தான் மருவற்கினிய
பண்ணகத்தான் பத்தர் சித்தத்துளான் பழநாயடியேன்
கண்ணகத்தான் மனத்தான் சென்னியான் எங்கறைக்
கண்டனே"

(திருநாவுக்கரசர்)

### 1. கோயில்களும் குறிகளும்.

யாவற்றையுங் கடந்த பரம்பொருளாகிய இறைவன் உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம், தன் கடந்த அருவ நிலையிலிருந்து இறங்கி இப்பூவுலகில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருந்து பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள்செய்து வருகிறன். அத்தகைய சிறப் பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுவதும் பால் நிறைந்திருந்தபோதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவதுபோலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தபோதி லும் பளிங்குக்கல்லின் (Lens) மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவதுபோலவும், நிலத்துக்கடியில் நீர் இருந்தபோதி லும் தோண்டிய இடத்தில்தானே நீர் தோன்றுவதுபோலவும் இறைவன் எங்கும் வியாபித்திருந்தபோதிலும் பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள்செய்வான்.
"இருஞ்சுரபிக்கு எங்கும் உருக்காண ஒண்ணுதபால் முலைப் பால் விம்மி ஒழுகுவது போல வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே"

(சிவஞானசித்தியார்)

''எங்கும் சிவனிருப்பன் ஆனாலும் ஏசற்ற
சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும்—லிங்கத்தும்
ஆவினுடம் பெல்லாமும் ஆவரித்து நிற்கினும் பால்
பாவுமுலைக் கண்மிகுதிப்பார்''

(சிவஞானப்பிரகாச வெண்பா)

இவ்வாறு புறத்தே கோயில்கொண்டு விளங்கும் பெருமான், பக்தியுடன் வழிபடும் அடியார்களின் உள்ளத்தையும் கோயிலாகக்கொண்டு அருள்செய்கிறான். ''காலையும் மாலையும் கை தொழுவார் மனம் ஆலயமாகும்'' (அப்பர்)

தென்னாடாகிய தமிழ்நாடு மிகுதியான கோயில்களைக் கொண்ட இடமாகும். நாட்டை வளப்படுத்தும் ஆறுகளும், வாவிகளும், சோலைகளும், சாலைகளும் சூழ்ந்து இயற்கைக் காட்சிகளைத்தந்து இன்பம் ஊட்டுகின்றன. வானளாவிய கோபுரங்களும், விமானங்களும் காண்போருக்குத் தூரத்தி லிருந்தபடியே தெய்வ உணர்ச்சியைத் தூண்டும் நிலையில் அமைந்துள்ளன. உடலுக்கு உணவைத்தரும் வயல்கள் அமைந்திருப்பதுபோல உள்ளத்துக்கு உணவாகிய பக்தியை உண்டாக்கும் பாங்குடைய கோயில்கள் பல அணிகளாக விளங்குகின்றன. நாட்டின் பல இடங்களிலும் சைவ—வைணவத் தலங்களும், பிற கோயில்களும் ஆங்காங்கு மிளிர்கின்றன. இவ்வகையில் தென்னாடு தெய்வ மணங்கமழும் திருநாடாகத் திகழ்கிறது.

''நோக்கிய இடங்களெல்லாம் நுவலருந் தலங்களாக
தேக்கிய தீர்த்தமாகச் சிவலிங்க மூர்த்தியாக
ஆக்கிய தவத்தாலும் அடைந்தவர்க் கறமென்றோதும்
பாக்கிய மாக்கி மேலுய்ப்பதுமூது சென்னிநாடு''.

(மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை)

மேலும் நமது முன்னோர்களின் நாகரீகத்துக்கு எடுத்துக் காட்டாக முன்னோர்கள் எடுப்பித்த திருக்கோயில்கள் விளங்குகின்றன. இவைகள் பக்தியை உண்டாக்கும் இடங்களாவதன்றிப் பெருஞ்சிற்பங்கள் நிறைந்த பெட்டகங்கள் ஆகும். மின்சார அணுக்கள் நிறைந்துள்ள இடம் (Power House) போலத் திருவருள் அணுக்கள் நிறைந்த சிறப்பிடங்கள் ஆகும்.



எழுத்தின் ஒலிவடிவை உணர்த்துவதற்கு வரிவடிவெழுத்து அமைந்ததுபோலக் கட்புலனால் காணமுடியாத கடவுளைக் காட்டும் சாதனங்களாகக் கோயில்கள் விளங்குகின்றன. இவைகளை நமது முன்னோர்கள் தம்உயிரினும் மேலாகப் பாதுகாத்துப்பின்வழியினராகிய நமக்கு அருஞ்செல்வங்களாக வைத்துச் சென்றார்கள். நாட்டின் நலத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் கோயில்கள் இன்றியமையாதன. வாழ்க்கைக் கடலில் அகப்பட்டுத் துன்புறும் மக்களுக்குக் கோயில்கள் கலங்கரை விளக்கங்களாக (Light House) விளங்குகின்றன. ''கோயில் விளங்கக் குடிவிளங்கும்'' ஆலயந்தொழுவது சால வும் நன்று'' என்பவை ஆன்றோர் கூறிய அனுபவ மொழிகளாகும்.

ஆதலின் பெறுதற்கருமையான மனிதப்பிறவியைப்பெற்றவர் அனைவரும், கோயில்களில் குடிகொண்ட பசுபதியாகிய பரமனை அன்பினால் வழிபட்டு அவனருளைப்பெற முயலுதல் சிறந்த கடமையாகும். ''உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பில் உத்தமனைக்காண்'' என்று ஔவையாரும் பகர்ந்துள்ளார்.

## 2. கோயிலும் இருப்பிடமும்.

தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல. அவை சிவன் கோயில்கள், முருகன் கோயில்கள், திருமால் கோயில்கள், அம்மன் கோயில்கள் முதலியன. இவைகளில் அந்தந்த சமயத் தலைவர்களால் தேவாரம் பாடப்பெற்ற தலங்களும், பெயர் மட்டும் குறிக்கப்பெற்ற வைப்புத்தலங்களும், தலபுராணங்களைக் கொண்ட கோயில்களும், தனிப்பாடல் பெற்ற தலங்களும், பிற்காலத்தில் பக்தர்களால் அமைக்கப்பெற்ற அபிமானத் தலங்களும் அடங்கியுள்ளன. இவைகளில் சோழ மன்னர்களால் அமைக்கப் பெற்ற அபிமானக்கோயில்களில் ஒன்றாகக் கிருஷ்ணராயபுரம் ஸ்ரீ திருக்கண்மாலீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இத்தலத்தைப் பற்றிய தனிப் பாடல்களும் உள்ளன.

எப்போதும் வற்றாத நீர்ப் பெருக்கையுடைய காவிரி நதி பாயும் நாடு சோழநாடு. ''வான்பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற் காவிரி'' என்று பட்டினப்பாலை என்னும் நூல் கூறுகிறது. ''அன்னல் பாகத்தை யாளுடைய நாயகி உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது'' என்று

சேக்கிழார் காவிரி நதியைப் போற்றுகிறார். "சோழநாடு சோறுடைத்து" என்னும் பழமொழியைப்பெற்றது. இந்நாட்டின் பெருமையை மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பின்வருமாறு காட்டுகிறார்.

"பூவினுள் பதுமம் போலும் புருடருள் திருமாள் போலும்
காவினுள் கற்பம்போலும் கலைகளுள் ஞானம்போலும்
ஆவினுள் சுரரான்போலும் அறத்துள் இல்லறம்போலும்
நாவினுள் மெய்ந்நாப்போலும் நாட்டினுள் சோழநாடு"

மேலும் "முந்நாட்டின் முன் நாடாய் சோழமண்டலக் கொடியே என்னக் காவேரி வளங்காட்டும் திருநாட்டின் பெருமையது கரையப்போமோ" என்று மற்றோராசிரியர் கூறுகிறார்.

இத்தகைய பெருமைகளையுடைய சோழநாட்டில் திருச்சிராப்பள்ளி ஜில்லா—குளித்தலை தாலுகாவில் கிருஷ்ணராயபுரத்தில் காவிரி நதிக்குத் தென்கரையில் ஸ்ரீ திருக்கண்மாலீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. திருச்சிராப்பள்ளி—ஈரோடு புகை வண்டி இருப்புப்பாதையில் சித்தலைவாய்—(சிற்றலைவாய்) ரயில் நிலையத்துக்குக் கிழக்கில் ஒரு பர்லாங் தூரத்தில் சாலைக்கு வடபுறத்தில் கோயில் உள்ளது. திருச்சி—கரூர் மோட்டார் வண்டி மார்க்கத்தில் மாயனூருக்குக் கிழக்கில் 2½ மைல் தூரத்தில் உள்ளது. ஆகவே ரயில் வண்டி மார்க்கமாகவும், மோட்டார் வண்டிமார்க்கமாகவும் இத்தலத்தை அடையலாம்

விஜயநகரத்தரசரான கிருஷ்ணதேவராயரின் நினைவாகக் கிருஷ்ணராயபுரம் என்ற பெயர் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இவ்வூரில் தபால் தந்தி நிலையமும் லோகல்பண்டு வைத்திய சாலையும் பஞ்சாயத்து போர்டு ஆபீசும் ஜில்லா போர்டைச் சேர்ந்த இரண்டு துவக்க நிலைப்பள்ளிகளும் உள்ளன. கிராம சமுதாயத்திட்டத்தில் சேர்ந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஜனத்தொகை சுமார் 2000. கோயிலுக்குப் பக்கத்தில் வடபுறத்தில் சிற்றலைவாய்க்காலும், அதற்கு வடபுறம் அகண்ட காவேரி நதியும் ஓடுகின்றன. ஊரில் கிராமச்சாவடி உண்டு.



## 3 கோயிலின் அமைப்பு.

ஊருக்குக் கிழக்கில் நீர் வளம் மிகுந்த சோலைகளுக்கு நடுவில் கோயில் கிழக்கு நோக்கி உள்ளது. கோயிலுக்கு வடபுறத்தில் தென்கரை வாய்க்காலும், காவிரி நதியும் ஓடுகின்றன. தென் புறத்தில் ரயில் வண்டிப் பாதையும் மோட்டார் வண்டிச்சாலையும் உள்ளன. கோயிலுக்கு உள்ளே ஓர் பிராகாரமும், வெளியில் ஓர் பிராகாரமும் உள்ளன. கோயிலுக்கு வெளியே முன்புறத்தில் பூசமண்டபமும், உத்தேச அலுவலகமும் உள்ளன. உள் பிராகாரத்தில் கீழ் புறத்தில் உக்கிராணமும் மடைப்பள்ளியும் பைரவர் சந்நிதியும், கிணறும் உள்ளன. மேற்குப் புறத்தில் வலஞ்சுழி விநாயகர் சந்நிதியும், வில்வ மரமும், உமாமகேஸ்வரர் சந்நிதியும் உள்ளன.

இக்கோயிலில் இறைவன் சந்நிதியும், இறைவி சந்நிதியும், முருகன் சந்நிதியும் சோமாஸ்கந்தர் வடிவத்தில் அமைந்துள்ளன. அதாவது இறைவனுக்கும் இறைவிக்கும் நடுவில் முருகப்பெருமான் அமர்ந்துள்ளான். பகலுக்கும் இரவுக்கும் நடுவில் மாலைக்காலம் அமைந்தது போல மூவரும் காட்சியளிக்கிறார்கள். இறைவனைப் பகலுக்கும், இறைவியை இரவுக்கும், முருகனை மாலைக் காலத்துக்கும் உவமையாகக் கூறப்படுகிறது.

"ஏலவார் குழலிறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பாலனாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞாலமேலுறும் இரவொடு பகலுக்கு நடுவாய்
மாலையான தொன்றழிவின்றி வைகுமாறொக்கும்"


(கந்தபுராணம்)

சுவாமி கோயில் முன் மண்டபத்தில் நந்தியும், பஞ்சலிங்கங்களும், நவக்கிரகங்களும் உள்ளன. இதையடுத்து உள்ளே மகாமண்டபத்தில் விநாயகர், சுப்பிரமணியர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், அஸ்திர தேவர், மாணிக்கவாசகர், பிரதோஷநாயகர் முதலிய உற்சவ மூர்த்திகள் உள்ளன. மூலஸ்தானத்தில் மூலவர் லிங்க வடிவத்தில் அமர்ந்துள்ளார். தெற்கில் வாயிலும், தக்ஷிணாமூர்த்தி சந்நிதியும் உள்ளன. சுவாமி கோயிலுக்குப் பக்கத்தில் வடபுறம் அம்மன் கோயில் உள்ளது.

முன்மண்டபத்தில் நந்தியும், கொலுமண்டபமும், மணிமண்டபமும், சாமான் அறையும் உள்ளன. மூலஸ்தானத்தில் ஸ்ரீ மதுகரவேணியம்மன் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகின்ருர். சுவாமி கோயிலிலிருந்து அம்மன் கோயிலுக்குப்போவதற்கு வாயிலுள்ளது. அம்மன் கோயில் மண்டபத்தூண்களில் பலருடைய திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுவாமி—அம்மன் கோயில்களுக்கு நடுவில் சற்று மேல்புறத்தில் முருகப்பெருமான் கோயில் உள்ளது. இவ்வித அமைப்பில் மூன்று கோயில்களும் சோமாஸ்கந்தர் வடிவத்தில் உள்ளது. தலத்துக்குரிய மரம் வில்வமரம். இக்கோயில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் சற்று கிழக்கில் செங்கல் கட்டிடமாயிருந்து பிறகு இவ்விடத்தில் புதிதாய்க் கட்டப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றதாய்க் கூறப்படுகிறது. கல்வெட்டுக்களில் பழய கோயில் சிற்றலைவாய் குணவாயிற் கோட்டம் என்றும், சிற்றலைவாய்க் கீழக்கோயில் என்றும் கூறப்படுகிறது. இக்கோயிலின் பரப்பு மூன்று ஏக்கர் அளவுள்ளது. சுற்றளவு கிழமேலடி 216. தென்வடலடி 135¾ கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே உள்ளது.

## 4. கோயிலின் படம்.

தென்வடலடி 135¾.




### எண்களின் விளக்கம்.

1 முன் வாயில்
2 உக்கிராணம்
3 மடைப்பள்ளி
4 தெற்கு வாயில்
5 தக்ஷிணாமூர்த்தி
6 வலஞ்சுழி விநாயகர்
7 உமாமகேஸ்வரர்
8 வில்வ மரம்
9 ஆறுமுகப்பெருமான்
10 சண்டிகேஸ்வரர்
11 பைரவர்
12 கிணறு
13-17 நந்திகள்
14 நவக்கிரகங்கள்
* துவாரபாலகர்
✸ மணிமண்டபம்.
15 மகாமண்டபம்
15(a) உற்சவ மூர்த்திகள்
16 { மூலவர் திருக்கண்மாலீஸ்வரர்
18 அம்மன் கோயில்
19 { அம்மன் மூலவர் ஸ்ரீமதுகரவேணி
20 அம்மன் கோயிலுக்குச் செல்லும் வாயில்
21 பூச மண்டபம்
22 அலுவலக உத்தேசக் கட்டிடம்
23 ஏழூரான் வாய்க்கால்
24 பூந்தோட்டம்
25 ரயில் பாதை
26 சாமான் அறை
27 கொலு மண்டபம்
28 பஞ்சலிங்கம்
29 முன் மண்டபம்
30 காவிரி

## 5. பிறகோயில்கள்.

இவ்வூரில் விநாயகர் கோயில் வரகணபதி கோயில் லட்சுமி நாராயணப் பெருமாள் கோயில், அங்காளம்மன் கோயில், மாரியம்மன் கோயில், பகவதியம்மன் கோயில், அழகு நாச்சியம்மன் கோயில், எல்லையம்மன் கோயில், பிடாரி கோயில், குருநாதசுவாமி கோயில் முதலிய கோயில்கள் தனித் தனி நிர்வாகத்தில் உள்ளன.

## 6. மூர்த்திகளின் பெயர்கள்.

இத்தலத்து விநாயகர் வலஞ்சுழிவிநாயகர் எனப்பெறுவர். வலப்பக்கம் சுழியை உடையவர். பெருமானுக்குத் திருக்கண் மாலீஸ்வரர் என்றும், தமிழில் திருமுக்கட் பெருமான் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. சூரியன், சந்திரன், அக்கினி மூன்றையும் கண்களாக உடையவர். கல்வெட்டுக்களில் மாலீஸ்வர நாயனார், மாலீச்சுவர தேவநாயனார் என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. திருமால் ஆழிபெறுவதற்குத் தம் கண்ணையே தாமரை மலராகக்கொண்டு வழிபட்ட பெருமையுடையவர் என்றும் சொல்லப்படுகிறது.

"ஏறுடனே மடர்த்தான் எண்ணியாயிரம் பூக்கொண்டு
ஆறுடைச் சடையினனை அர்ச்சித் தானடியிணைக்கீழ்
வேறுமோர் பூக்குறைய மெய்ம்மலர்க் கண்ணையிண்டக்
கூறுமோ ராழியீந்தார் குறுக்கை வீரட்டனாரே"

(திருநாவுக்கரசர்)

அம்மனுக்கு மதுகரவேணி என்று பெயர். தமிழில் வண்டார் குழலியம்மை என்றும், தேனம்மை என்றும் பெயர்கள் வழங்கும்.

## 7. தீர்த்தங்கள்.

1. **தென்கரை வாய்க்கால்:** கோயிலுக்குப் பக்கத்தில் வடபுறத்தில் ஓடுவது. காவிரியின் கிளைநதி எப்போதும் நீர் வளம் குறையாமல் இருப்பது. இது ஏழுரான் வாய்க்கால் என்றும், சிறிய அலைகளை உடையதால் சிற்றலை வாய்க்கால் என்றும் பெயர்பெறும். இதன் பெயராலேயே சித்தலைவாய் (சிற்றலைவாய்) என்னும் ஊர்ப்பெயரும் அமைந்துள்ளது.



2. **அகண்ட காவேரி:** வடபுறம் ஓடுவது, சோழர்குலக் கொடி என்று சொல்லப்படும்.

3. **கிணறு:** கோயிலுக்குள் இருப்பது.

இத்தலத்தில் காவிரிநீர் கிணறாகவும், வாய்க்காலாகவும், நதியாகவும் அமைந்து உதவுகிறது.

## 8. தலப்பெருமைகள்.

இத்தலம், மூர்த்தி. தலம், தீர்த்தம் என்னும் மூன்றிலும் சிறப்புடையது. கோயில் அமைப்பு சோமாஸ்கந்தர் வடிவம் போன்றது. இயற்கை வளமுடையது. காவிரி நதியும், கிளை நதியாகிய சிற்றலை வாய்க்காலும் எப்போதும் நீர்வளங் குன்று மல் ஓடிக்கொண்டிருப்பதால் பசுமையான சோலைகளைக் கொண்டு விளங்குவது குளிர்ச்சியான காற்றும், நறுமணமும் வீசிக்கொண்டிருக்கும். சோலைகளில் வண்டுகள் ஒலித்துக் கொண்டிருக்கும். அம்மனுக்கு ஸ்ரீ மதுகரவேணி என்ற பெயரும் அமைந்துள்ளது. நகர வாழ்க்கையில் மன அமைதி பெறமுடியாமல், அல்லறபடும் மக்களுக்கு மன அமைதியை உண்டாக்கும் இடம்.

தமிழ் நாட்டு மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர் கள் இவ்வூருக்கு மேற்கில் மதுக்கரை என்ற கோட்டக்கரை யில் தங்கள் நாட்டு எல்லைகளைப் பிரித்துக்கொண்டார்கள் என்றும் அதுவே சோணாட்டிற்கு மேற்கெல்லையாய் விளங்கு கிறதென்றும், சோழ மன்னர்களில் ஒருவன் காவிரியின் நீர் வளத்தைக்கொண்டு நிலவளத்தைச் செழிக்கச் செய்ய இவ் வூருக்கு மேற்கில் ஓர் வாய்க்காலை வெட்டுவித்து அதற்குச் சிற்றலைவாய் என்று பெயரிட்டு வழங்கச்செய்தான் என்றும் அதுவே தென்கரை வாய்க்கால்—ஏழூரான் வாய்க்கால் என்று வழங்குகிறதென்றும் பின்னால் ஊருக்கு சித்தலைவாய் (சிற்றலை வாய்) என்று பெயர் வழங்குகிறதென்றும் சொல்லப்படுகிறது இதைப்போலவே பேட்டைவாய்த்தலையில் காவிரியிலிருந்து உய்யக்கொண்டான் கால்வாய் வெட்டப்பட்டு நிலங்களுக்கு நீர் விடப்படுகிறது. விஜயநகரத்து அரசரான கிருஷ்ணதேவ ராயர் தென்திசை நோக்கி வருங்கால் இவ்விடத்தில் தங்கி

யிருந்து தன் நினைவாக கிருஷ்ணராஜபுரம் என்று பெயரிட்டு பலரைக் குடியேற்றி வாழச் செய்தார் என்றும் மற்றோர் வரலாறு கூறப்படுகிறது.

இத்தலத்தில் கோயில்கொண்ட மூர்த்திகளின் பேரில் பல அன்பர்கள் அவ்வப்போது பல பிரபந்தங்களையும், தனிப் பாடல்களையும் பாடியுள்ளார்கள். மாலீசுவரப் பெருமான் பேரில் ஒருவர் வடமொழியில் நூறு பாடல்களையுடைய "மாலீசுவரலகிரி" என்னும் நூலைப் பாடியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. சங்கீத வித்வானாகிய கனம் கிருஷ்ணய்யர் இத்தலத்து மதுகரவேணியம்பிகை பேரில் தோடி ராகத்தில் "திருக்கண்மாலீசுவரருக்குகந்த தேவியே" என்று தொடங்கும் கீர்த்தனத்தைப் பாடியிருப்பதாகக் கனம் கிருஷ்ணய்யர் சரித்திரத்தில் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இக்கீர்த்தனம் இதில் சேர்க்கப் பட்டுள்ளது. இத்தலத்தில் திருமணங்கள் நடைபெறுகின்றன இவ்வூரில் வேறுபல கோயில்களும் உள்ளன.

எனவே இத்தலம் இயற்கை வளத்தாலும் மூர்த்தி—தலம்—தீர்த்தங்களின் சிறப்பாலும் பிற சரித்திரக் குறிப்புக்களாலும் பெருமையுற்று விளங்குகிறது.

(இப்பகுதியிலுள்ள செய்திகள் கிருஷ்ணராஜபுரம் ஸ்ரீ ராமரத்தினமய்யர் கொடுத்த குறிப்புகளைக் கொண்டு சேர்க்கப்பெற்றன)

## 9. திருப்பணிகள்

முன்னோர்கள் ஏற்படுத்திய கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி பாதுகாத்து அவ்வப்பொழுது ஆவன செய்ய வேண்டும். புதியதோர் கோயிலை அமைப்பதைப்பார்க் கிலும் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணி யத்தைத் தரும் என்பர். "புதிதுறப் பணிகள் வேறுபுரிவதின் பழயதொன்றை விதியுளிபுதுக்குவோர்க்கு மிகப்புண்ணியந் தான் மெய்தும்" என்று ஆன்றோர் கூறியுள்ளார்.

"மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி
நாதமா லிலிங்கமாதி நளின புட்கரணியாதி
சேதமுற்றிடின் முன்போல் செய்பவர்க் குறுபலன்தான்
ஓதுமுன்செய் தோர்தம்மில் ஆயிரம் குணிதமோங்கும்"

(சிவபுண்ணியத் தெளிவு)



எனவே இக்கோயிலில் அவ்வப்போது திருப்பணிகள் நடை பெற்றுவந்திருக்கின்றன. இக்கோயில் பல ஆண்டுகளுக்கு முன் இவ்வூருக்குக் கிழக்கில் செங்கல் கட்டிடமாயிருந்து பிறகு ஜயா என்னும் மாலீசுவரய்யரின் முயற்சியால் தற்போதுள்ள கோயில் கட்டப்பெற்றுக் கர வருடம் கும்பாபிஷேகம் நடந்த தாகச் சொல்லப்படுகிறது.

இக்கோயிலின் திருப்பணிகளைக் குறிக்கும் கல்வெட்டுக் கள் கோயிலின் முன்வாயில் சுவர்களிலும், முருகன் கோயில் மண்டபத்திலும் உள்ளன. அவை வருமாறு :—

### முன்வாயில் சுவரிலுள்ளவை :—

"கர ஷூ தை மீ 12உ கிருஷ்ணராயபுரம் ஈஸ்வரம் கோயில் கோபுரவாசல் நேனுல் உபோய்யாப்புத்தூர் முத்துச் சாமி செட்டியார் குமாரன் கோபால செட்டியார் ஒபயம்.

தேவிசகாயம், பார்த்திப ஷூ தை மீ 2உ திருக்கண் மாலீசுவர சுவாமி சுத்துப்பிரகார திருப்பணி வேலை மகா-ா-ஸ்ரீ குருநாத பிள்ளை அவர்கள் அதிகாரத்தில் மக[illegible]கள் வெங்கய்யன், அனந்தராமய்யன். சுப்பராய[illegible] ஈசுரய்யன், மகாகெணபதி கிருஷ்ணய்யன், [illegible]ர்யர் இவர்கள் பெரியதெனத்தில் கிருஷ்ண ராயபுரம் மா[illegible]ம் "X-X"

### முருகன் கோயில் மண்டபத்திலு[illegible]து:

"விளம்பிஷூ பங்குனிமீ 11உ முத[illegible]விசய ரகுனதசேது பதி காலத்து கந்தப்பபிள்ளை கட்டிவச்சது மண்டபம் செகரம்"

27—12—51ல் ஸ்ரீ சங்கரானந்த சரஸ்வதி சுவாமிகளால் கோயிலில் மின்சார விளக்குத் திறப்பு விழா நடைபெற்றது.

பிறகு 21—4—57ல் அறநிலையப் பாதுகாப்பு இலாகா ஆணையாளர் திரு. A. உத்தண்டராம பிள்ளை, B. A., B. L. அவர் கள் தலைமையில் புதிய திருப்பணித் தொடக்க விழா நடை பெற்றது. அன்றைக்கு அடித்தளக் கல்லும் நாட்டப் பெற்றது. கோயில் நிதியிலிருந்து சுமார் பதினைந்தாயிரம்

112878
Q 23 ; 38. 21192. K
1152

ரூபாய் செலவழிக்கப்பெற்று, விமானங்கள் புதுப்பிக்கப்பெற்றும், மதில்கள், மண்டபங்கள் செப்பனிடப்பெற்றும், வேறு பல திருப்பணிகளும் நிறைவேறி 27—6—58 வெள்ளிக்கிழமை நாளில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற இருக்கிறது.

## 10. சிற்பங்கள்

கோயிலில் சுவாமி, அம்மன், முருகன் சந்நிதிகள் சோமாஸ்கந்தர் வடிவத்தில் அமைந்துள்ளன. விநாயகரின் துதிக்கை வலஞ்சுழித்தது. அம்மன் கோயில் மண்டபத்தில் பலருடைய திருவுருவங்கள் உள்ளன. மகா மண்டபத் தூண்களில் சனீஸ்வரர் காக வாகனத்தில் அமர்ந்த சிற்பமும், அனுமான் சிவலிங்கத்தைத் தூக்கிவருஞ் சிற்பமும் உள்ளன. மண்டபக் கொடுங்கைகளில் யாளிகளின் உருவங்கள் அமைக்கப் பட்டுள்ளன. முன் வாயிலிலும், மண்டபத் தூண்களிலும் அம்மன் கோயில் வாயிலிலும், மாதர்களின் நடனச் சிற்பங்கள் உள்ளன. துவார பாலகர்களின் தோற்றம் அழகாய் உள்ளது. பஞ்சபூதங்களுக்குறிய ஐந்து லிங்கங்கள் உள்ளன. தேவியின் திருவுருவம் மிகவும் வசீகரமாய் உள்ளது. கருணை பொழி கண்ணும், புன்முருவல் பூத்த திருமுகமும், அபய மளிக்கும் கரமும், மலர் போன்ற திருவடிகளும் கொண்டு தரிசிப்போர்க்குத் தன்னருள் வழங்குகிருள். சுற்றுப்பிரகாரத்திலுள்ள தக்ஷிணாமூர்த்தி, முருகப்பெருமான், வள்ளி, தெய்வயானை, உமாமகேசர், சண்டேஸ்வரர் முதலிய மூர்த்திகளின் சிலைகள் நல்ல சிற்பங்களைக் கொண்டுள்ளன. மகா மண்டபத்திலுள்ள விநாயகர், சுப்பிரமணியர், சோமாஸ்கந்தர் முதலிய உற்சவ மூர்த்திகள் அழகிய சிற்பத் திறன் பெற்று விளங்குகின்றன. விமானங்கள் வர்ணங்கள் தீட்டிப் புதுப்பிக்கப் பெற்றன.

## 11. கல்வெட்டுகள்

இக்கோயிலில் திருப்பணிகளைக் குறிக்கும் சில கல்வெட்டுகள் மட்டும் உள்ளன. இக்கோயிலைப் பற்றிய பிற கல்வெட்டுகள், இவ்வூரிலுள்ள இலக்குமி நாராயணப்பெருமாள் கோயிலும், சங்கரமலைப்பட்டி மலைக்கோயிலிலும், பழைய சயங்கொண்ட சோழபுரம் சோழவனேஸ்வரர் கோயிலும் உள்ளனவாகத் தெரியவருகிறது.



**1 பெருமாள் கோயில் அர்த்தமண்டபத்துச் சுவரில் உள்ளவை:**

"ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தத்து திரிபுவன சக்கரவர்த்தி கோப்பரகேசரி கோனேரின்மை கொண்டான் ராசராச சோழ தேவர்க்கு ஆண்டு 12வது சித்திரை சதய நாள்.......... சோழவள நாட்டு மதுக்கரை மண்டலத்து சிற்றலைவாய் குணவாயிற் கோட்டத்து மாலீச்சுவர நாயனர் முற்றூட்டு நிலத்துக்கு வடக்கு"

**2. சங்கரமலைப்பட்டி மலைக்கோயிலில் உள்ளவை:**

"ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தத்து கோப்பரகேசரி கோனேரின்மை கொண்டான், கருப்பூர்கொண்ட காளிங்க தேவராயருக்கு ஆண்டு 3 வது ஆக—சிவபுரம் சங்கரதேவ நாயனர்க்கு விட்ட நிலம் சிற்றலைவாய் குணவாயிற் கோட்டத்து மாலீச்சுவர தேவநாயனர் புஞ்சை நிலத்துக்கு மேற்கு"

**3. பழய சயங்கொண்ட சோழபுரம் கோயிலில் உள்ளவை :**

"சிற்றலைவாய் கீழ்க்கோயில் மாலீச்சுவர நாயனர் திருநாமத்துக் காணிக்குத் தெற்கு முள்ளிட்ட 25 மாவும்"

**இக்கல்வெட்டுக்களால் அறியப்படுவன :**

முதலாம் ராஜராஜ சோழன் காலத்திலிருந்தே இத்தலம் சிறப்புற்றிருந்தது. இப்பகுதி மதுக்கரை மண்டலம் என்று பெயர் பெற்றிருந்தது. இவ்வூருக்குச் சிற்றலைவாய் என்ற பெயர் பழமையாய் ஏற்பட்டது. கோயில் ஆதியில் ஊருக்குக் கிழக்கே இருந்ததால் சிற்றலைவாய் குணவாயிற் கோட்டம் என்றும், கீழ்க்கோயில் என்றும் பெயர்கள் ஏற்பட்டிருந்தன. பெருமானுக்கு மாலீச்சுவர நாயனர் முதலிய பெயர்கள் வழங்கி வந்துள்ளன. இக்கோயிலுக்குப்பல நிலங்கள் விடப்பட்டிருந்தன. முற்றூட்டு என்பது வரியில்லாமல் சர்வமான்யமாய் விடப்பட்ட நிலம். தற்போதுள்ள கோயில் புதிதாய் அமைக்கப்பெற்றதால் கல்வெட்டுக்கள் காணப்படவில்லை.

## 12. தினப்பூஜையும், திருவிழாக்களும்

இக்கோயிலில் தினந்தோறும் காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்து

வருகின்றன. விடியற்காலை திருமஞ்சனமும் மாலை 2ங் காலப் பூஜையும் உண்டு. பூஜை நேரங்களில் பெரிய மணி அடிக்கப் படும். அந்தந்த நேரங்களில் சென்று வழிபடுவதால் மிக்க புண்ணியம் உண்டு.

"காலைதொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர் போம்—மாலையினில்
வந்துசிவன் தாளைவந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயர மெல்லாம் விடும்".

(சிவதரிசனமகத்துவம்)

மேலும் பிரதோட காலத்தில் சென்று தரிசனம் செய்வது மிகவும் நல்லது. பிரதோட காலமாவது வளர்பிறையிலும், தேய்பிறையிலும் வரும் திரயோதசி திதி நாளில் சூரியன் மறைவதற்கு முன்னுள்ள மூன்றே முக்கால் நாழிகையும், பின் னுள்ள மூன்றே முக்கால் நாழிகையும் கொண்ட காலம். சிவபெருமான் ஆலகால விஷம் உண்ட ருளிய காலம் என்பர்.

"வாழிய இருபக்கத்தும் வளர்திரயோதசிக்கண்
ஆழியிற் கதிரோன் விழும் அதற்முன் மூன்றேமுக்கால்
நாழிகை பின்னுமந்த நாழிகை இணையகாலம்
பாழியங் கடல்சூழ்வைப்போர் பகர் பிரதோடம் என்பார்"

(மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை)

**திருவிழாக்கள் :** இக்கோயிலில் பிரமோற்சவமாகிய பெரு விழா நடைபெறுவதில்லை. மாதவிழாக்கள் மட்டும் நடை பெற்றுவருகின்றன. ஆண்டுதோறும் ஆனி மாதத்தில் ஆனித் திருமஞ்சனமும், ஆடி மாதத்தில் பூர விழாவும், ஆவணியில் ஆவணி மூல விழாவும், விநாயக சதுர்த்திப்பூஜையும் நடை பெறும். புரட்டாசியில் நவராத்திரி விழா பத்து நாட்கள் வரை நடைபெறும். ஐப்பசி மாதத்தில் தீபாவளி வழிபாடும், கந்தர் சஷ்டிவிழாவும், அன்னபிஷேகமும் நடைபெறும். கார்த்திகை மாதத்தில் சோமவாரக் கட்டளைகளும், கார்த்திகை தீபமும் நிகழும். மார்கழி மாதத்தில் திருவாதிரை உற்சவம் 3 நாட்களும், மகாவியதிபாத ஆராதனையும் நிகழும். தை மாதத்தில் பொங்கல் விழாவும், பூச விழாவும் மாசி மாதத்தில் மகாசிவராத்திரி நாளில் நான்கு காலப் பூஜைகள் நிகழும். மாதந்தோறும் பிரதோஷக்கட்டளைகள் நடை பெறுகின்றன.



"மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொழிவுகண்டார்தல்"

என்னும் பெரிய புராணப் பாடலின்படி மனிதராய்ப் பிறந்த வர் அனைவரும் பெருமானுக்கு நடைபெறும் திருவிழாக்கண்டு அவனருள் பெற முயல்வது நலமாகும்.

## 13. வருமானமும் சொத்துக்களும்.

இக்கோயிலுக்குச் சுமார் 182 ஏக்கர் நன்செய்—புன்செய் நிலங்கள் உள்ளன. இவைகள் குளித்தலை தாலூகா கிருஷ்ண ராஜபுரம், பொய்யில்புத்தூர், சிற்றலைவாய், முனையனூர், பாம்பயம்பாடி, பொம்மக்கவுண்டனூர், முசிரி தாலூகா அரசலூர் முதலிய கிராமங்களில் உள்ளன. இவைகளின் குத்தகை மூல்யமாயும், மனை வாடகை, வட்டி மூலமாயும் ஆண்டுதோறும் சுமார் 9000 (ஒன்பதாயிரம்) ரூபாய் வரு மானம் வரும். அவைகளின் விவரம்:—

| | | |
|---|---|---|
| நில வருமானம் ரொக்க குத்தகை சுமார் | ரூ. | 4400—0—0 |
| மனைவாடகை வகையரா | ரூ. | 60—0—0 |
| வட்டி முதலியவை | ரூ. | 60—0—0 |
| நெல் வரவு சுமார் 443 கலம் | ரூ. | 4430—0—0 |
| உபயம் | ரூ. | 50—0—0 |
| கூடுதல் | ரூ. | 9000—0—0 |

இக்கோயிலில் திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. ஓர் திருமணத்திற்கு ரூ. 13 கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

## 14. நிர்வாகம்

இக்கோயிலின் நிர்வாகம் ஆதியில் திருச்சி மாவட்ட தேவஸ்தானக் கமிட்டியின் மேற்பார்வையிலிருந்து வந்தது பிறகு 1948-ம் ஆண்டிலிருந்து (B. O. 4090-21—10—1948 கடிதப்படி சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Cheritable Endowments) நேர் நிர்வாகத்தில் இருந்துவருகிறது. 12—2—49ல் நிர்வாக அதிகாரி முதலாவதாக நியமிக்கப்பெற்றார். தற்போது அறநிலையத்தாரால் நியமிக்கப்பெற்ற (E. O.) நிர்வாக அதிகாரியும், அறங்காவலரும் (Trustee) கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள். தற்போது தர்மகர்த்தராக இருப்பவர் இக்கோயிலில் ஆதியில் டிரஸ்டியாயிருந்த திரு. மாலீசுவரய்யரின் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது. இவர் காலத்தில் கோயிலில் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டன.

## 15. கோயில் தரிசனமுறை.

கோயிலுக்குச் செல்வோர் நீராடிச் சிவ சின்னங்களாகிய திருநீறு, உருத்திராக்கம் அணிந்து தேங்காய், பழம், கற்பூரம் முதலியவற்றில் இயன்ற அளவு எடுத்துச்செல்ல வேண்டும் முதலில் விநாயகரையும், முருகனையும், சிவபிரானையும் பிறகு நடராஜர், தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் சமயக்குரவர் நால்வர், அறுபத்துமூவர் முதலியோரையும் பிறகு தேவியாரையும் சண்டிகேஸ்வரரையும் முறையாகத் தெரிசிக்கவேண்டும்.

### கோயிலில் செய்யத்தகாத குற்றங்கள்;

மலசலங் கழித்தல், எச்சில் உமிழ்தல், சூதாடுதல், ஆசாரமில்லாது செல்லுதல், வீண்வார்த்தை பேசுதல், அவசரமாக வலம்வருதல், நந்திதேவருக்கும் சிவபெருமானுக்கும் குறுக்கே போதல், நிர்மாலியப் பொருள்களை மிதித்தல் முதலியன.





## 16. துதிப்பாடல்கள்.

### விநாயகர்

1. விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

(இரட்டைமணிமாலை)

### முருகப்பெருமான்.

2. புன்னெறி அதனிற்செல்லும் போக்கினை விலக்கிமேலாம்
நன்னெறி ஒழுகச்செய்து நவையறு காட்சிநல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கிஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி

(கந்தபுராணம்)

### சிவபெருமான்

3. கண்ணானாய் மணியானாய் கருத்தானாய் அருத்தானாய்
எண்ணானாய் எழுத்தானாய் எழுத்தினுக்கோரியல்பானாய்
விண்ணானாய் விண்ணிடையே புரமெரித்த வேதியனே
அண்ணானை ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே

(திருநாவுக்கரசர்)

4. பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே

(சுந்தரர்)

### தேவியார்

5. மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனதிற்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்

(பதிபசுபாச விளக்கம்)

6. தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

(அபிராமி அந்தாதி)

### தக்ஷிணாமூர்த்தி (தென் முகக்கடவுள்)

7. மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியின் கதுவநல்கிய
செம்மலை அலதுளம் சிந்தியாதரோ

(திருவானைக்காபுராணம்)

### நந்திதேவர்

8. வந்திறை அடியில்தாழும் வானவர் மகுடகோடி
பந்தியின் மணிகள்சிந்த வேத்திரப்படையால் தாக்கி
அந்தியும் பகலுந் தொண்டர் அலகிடும்குப்பையாக்கும்
நந்தியெம் பெருமான் பாதநகைமலர் முடிமேல்வைப்பாம்

(திருவிளையாடற் புராணம்)

### நால்வர்

9. பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன்கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர்பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி

(பெரியபுராணம்)

### சண்டேசுரர்

10. கொலைகடிந் தொழுகுவோரே குழகனை அடைவாரென்று
மலைவில் வேதாகமத்தின் வழக்குமாறாகத் தந்தைக்
கொலைபுரிந் துண்டலாதி கொடுத்திட ஏற்றுச்செம்பொன்
மலைவில் நாயகன்றாள் சேர்ந்த மழவுதாள் சார்ந்து வாழ்வாம்.

(மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை)



### கோளறுபதிகம் (நவக்கிரகங்கள்)

11. வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய்புதன் வியாழன்வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறுநல்ல நல்லஅவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

(திருஞானசம்பந்தர்)

### வேண்டுகோள்.

12 கல்லாப்பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நினையாப்பிழையும் நின்அஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையும் துதியாப்பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.



கனம் கிருஷ்ணய்யர் பாடிய கீர்த்தனம்

## கிருஷ்ணராஜபுரம் ஸ்ரீ மதுகரவேணியம்மை

இராகம்: தோடி.] பல்லவி [தாளம்: ஆதி

திருக்கண் மாலீச் வரர்க்குகந்த
தேவியே ஓங் காரி பரஞ் சோதி (திருக்கண்)

அநுபல்லவி

பெருக்க மாகவே கிருஷ்ண புரந்தனிலே
பெருமையாக வாழ்ந்திடும் ஆதிஅன்
பருக்கு மிகவும் நினைத்த படிவரம்
கொடுக்கும் அம்மணி மதுகர வேணி சுகபாணி
(திருக்கண்)

சரணம்

ஆயும் கலைக்கிரங்கும் ஆனந்த வல்லியே
மாயவன் றங்கையே மகத்தான ஒளியே
காயக்கி லேசஞ்செய்து கருத்துருக அறியேன்
தாயே சகலத்திலுந் தான்தானே யாய்நிறைந்த
(திருக்கண்)

(சென் [illegible] K. [illegible]ப்பிரமணியய்யர் அவர்கள் மூலம் இக் [illegible]னம் கிடைத்தது.

TAMIL NADU [illegible] MADRAS 14
112878

[illegible]ாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
(திருஞானசம்பந்தர்)

ஸ்ரீ திருக்கண்மாலீஸ்வரர் திருவடி போற்றி.

Q.813:38.ல1192,K

வெற்றிவேல் பிரஸ்,
தஞ்சை.